# செய்தி வெளியீடு

## இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, காப்புறுதிக் கைத்தொழிற்துறையுடன் இணைந்து, டிஜிட்டல் மோட்டார் காப்புறுதி அட்டையை அறிமுகப்படுத்துவதுடன் டிஜிட்டல் ஆளுகை மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு ஆகியவற்றை தொடங்குவதற்கு முன்னிற்கின்றது.

இலங்கை காப்பீட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு (IRCSL), இலங்கை காப்புறுதிச் சங்கத்துடன் (IASL) இணைந்து, இலங்கையின் டிஜிட்டல் மோட்டார் காப்பீட்டு அட்டையை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தவுள்ளது. இது நாட்டின் டிஜிட்டல் மாற்றப் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாகும்.

அதிகாரப்பூர்வ ஆரம்ப விழா 2026 ஜனவரி 7ஆம் திகதி, பொது பாதுகாப்பு அமைச்சர் கௌரவ ஆனந்த விஜேபால அவர்களின் தலைமையில், பத்தரரமுல்ல, சுஹுருபாயவில் அமைந்துள்ள பொது பாதுகாப்பு அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது. இதில் காவல் துறை உயர் அதிகாரிகள், காப்புறுதிக் கைத்தொழிற்துறை தலைவர்கள், ஊடக பிரதிநிதிகள் மற்றும் பிற முக்கிய பங்குதாரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்த முயற்சியின் மூலம் இலங்கையின் முதல் டிஜிட்டல் மோட்டார் காப்புறுதி அட்டை அறிமுகப்படுத்தப்படுகிறது, இது விரைவில் நாடு முழுவதும் நடைமுறைக்கு வரும். இந்த முயற்சி அரசின் தேசிய டிஜிட்டல்மயமாக்கல் திட்டத்துடனும் "Go Green" கொள்கை வடிவமைப்புடனும் சமாந்தரமாக பயணிக்கின்றது. டிஜிட்டல் மோட்டார் காப்புறுதி அட்டை, பௌதீக வடிவிலான பிளாஸ்டிக் காப்புறுதி அட்டைகளின் தேவையை நீக்கி, காப்புறுதியாளர்கள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் அமுலாக்க அதிகாரிகளுக்கு மேலும் பாதுகாப்பான, திறமையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு பொறுப்பான தீர்வை வழங்குகிறது.

### டிஜிட்டல் மோட்டார் காப்புறுதி அட்டையின் முக்கிய நன்மைகள்

- **சுற்றுச்சூழல் நிலைபேறு:** ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பிளாஸ்டிக் காப்புறுதி அட்டைகளை அச்சிடுவதும் விநியோகிப்பதும் தேவையற்றதாகி, தேசிய சுற்றுச்சூழல் இலக்குகளை ஆதரிக்கிறது.
- **செயற்பாட்டு திறன்:** காப்புறுதி நிறுவனங்களின் அச்சிடல் மற்றும் நிர்வாக செலவுகளை குறைத்து, திறன் மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது. இதன் பயன் இறுதியில் காப்புறுதி பெற்றவர்களுக்கு கிடைக்கிறது.
- **காப்புறுதிப் பூட்கையாளர்களின் வசதி:** வாகன உரிமையாளர்கள் தங்களின் செல்லுபடியாகும் மோட்டார் காப்புறுதி விவரங்களை எந்த நேரத்திலும் தங்களின் கைபேசிகள் மூலம் அணுக அனுமதிக்கிறது.

மேலும், இந்த முயற்சி காவல் துறை அதிகாரிகள் மையப்படுத்தப்பட்ட டிஜிட்டல் அமைப்பின் மூலம் மோட்டார் காப்புறுதிப் பூட்கையை உடனடியாக சரிபார்க்க உதவுவதுடன், போலி காப்புறுதி ஆவணங்களை குறிப்பிடத்தக்க அளவில் குறைத்து, வீதிப் பாதுகாப்பையும் பொதுமக்கள் பாதுகாப்பையும் வலுப்படுத்தும்.

டிஜிட்டல் மோட்டார் காப்புறுதி அட்டை என்பது ஒரு தொழில்நுட்ப மேம்பாடு மட்டுமல்ல காப்புறுதி மற்றும் அமலாக்க சூழலெங்கும் தெளிவுத்தன்மை, திறன் மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவிக்கும், நம்பிக்கையை உருவாக்கும் ஒரு முயற்சியாகும். காப்புறுதி பெற்றவர்கள் மற்றும் சட்டம் நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் 2252 என்ற எண்ணை அழைப்பதன் மூலம் அல்லது #2252 என்ற இலக்கத்தை அழுத்தி யு.எஸ்.எஸ்.டி இலத்திரனியல் உறுதிப்படுத்தல் தீர்வை பயன்படுத்தி தங்களின் மோட்டார் காப்புறுதிப் பூட்கைகளின் செல்லுபடித் தன்மையை உறுதிப்படுத்த முடியும் இதன் மூலம் வீதிச் சோதனைகள் மேலும் விரைவாகவும் திறமையாகவும் நடைபெறுகின்றன.

இந்த முக்கியமான முயற்சி, ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புக்கும் கைத்தொழில்துறைக்கும் இடையிலான வலுவான கூட்டாண்மையை பிரதிபலிப்பதுடன், பொதுநலன், நிலைபேறு மற்றும் தேசிய பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி, டிஜிட்டல் புதுமைகளை ஏற்றுக்கொள்ளும் இலங்கையின் மோட்டார் காப்புறுதிக் கைத்தொழிற்துறைக்கான ஒரு புதிய யுகத்தை அறிவிக்கிறது.

### இலங்கை காவல் துறைக்கு 500 மடிக்கணனிகளை (tablets) வழங்குதல்

இலங்கை காப்புறுதிச் சங்கம், அதன் 13 பொது காப்பீட்டு உறுப்பினர் நிறுவனங்களுடன் இணைந்து, புதிய விபத்து முகாமைத்துவ முறைமையின் அமலாக்கத்திற்கு ஆதரவாக இலங்கை காவல் துறைக்கு 500 க்கும் மேற்பட்ட மடிக்கணணிகளை வழங்கவுள்ளது. பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சுக்கு வழங்கப்படும் இந்த பங்களிப்பு, வீதிப் பாதுகாப்பை மேம்படுத்துதல், விபத்து அறிக்கையிடும் முறைகளை வலுப்படுத்துதல் மற்றும் முன்னணியில் பணியாற்றும் அதிகாரிகளின் செயல்திறனை உயர்த்துதல் ஆகியவற்றில் காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் வலுவான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

இந்த மடிக்கணணிகள், காவல் துறை அதிகாரிகள் விபத்து தரவுகளை டிஜிட்டல் முறையில் மற்றும் நேரடி நேரத்தில் பதிவு செய்ய உதவுவதன் மூலம், கைமுறை ஆவணப்படுத்தலின் சார்பை குறைத்து, விபத்து அறிக்கையிடலின் துல்லியத்தையும் வேகத்தையும் மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றும். காப்புறுதிக் கைத்தொழிற்துறையும் சட்ட அமலாக்க அமைப்புகளும் இடையிலான டிஜிட்டல் இணைப்பை வலுப்படுத்துவதன் மூலம், நாடு முழுவதும் வாகன ஓட்டிகளுக்கான பதிலளிக்கும் மற்றும் வெளிப்படையான சூழலை உருவாக்க இந்த வழங்கல் பங்களிக்கும்.

## விருப்ப இழப்பீட்டு திட்டம்

டிஜிட்டல் அறிமுகத்துடன் அதற்கு இணையாக, மோட்டார் வாகன விபத்துகளில் மூன்றாம் தரப்பு பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி இழப்பீடு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட விருப்ப இழப்பீட்டு திட்டத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டை இலங்கை காப்பீட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்த மேம்பாட்டின் கீழ், வழங்கக்கூடிய அதிகபட்ச இழப்பீட்டு தொகை ரூ. 1 மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை, நுகர்வோர் பாதுகாப்பை வலுப்படுத்துதல், விபத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு காலத்திற்குள் நிதி நிவாரணம் வழங்குதல் மற்றும் மோட்டார் காப்புறுதி அமைப்பின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றில் ஒழுங்குமுறை அமைப்பின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது.

## நிகழ்வு விவரங்கள்

**நிகழ்வு:** இலங்கையில் டிஜிட்டல் மோட்டார் காப்புறுதி அட்டையின் அதிகாரப்பூர்வ அறிமுகம் மற்றும் இலங்கை காவல் துறைக்கு 500 டிஜிட்டல் மடிக்கணணிகளை வழங்குதல்

**திகதி:** 07 ஜனவரி 2026 (புதன்கிழமை)
**நேரம்:** பி.ப 2.30
**இடம்:** கேட்போர்கூடம், பொது பாதுகாப்பு அமைச்சு, 7ஆம் மாடி, சுஹுருபாய, பத்தரமுல்ல.


**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**

**11ஆம் மாடி, கிழக்கு கோபுரம்**

**உலக வர்த்தக மையம்**

**கொழும்பு 01**

| | |
|---|---|
| இணையத்தளம்: www.ircsl.gov.lk | மின்னஞ்சல்: info@ircsl.gov.lk |
| தொலைபேசி: 011 2396184 - 9 | பக்ஸ்: 011 2396190 |


**திகதி:** 06.01.2026